திருவாரூர் முதன்மைக்கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்

பிறப்பிப்பவர்,, திரு. இரா. சௌந்திரராஜன்., எம்.எஸ்ஸி.,பி.எட்., எம்.பில்

ந.க.எண்.8803/அ1/2023 நாள் . 14.10.2024

பொருள் : பள்ளிக்கல்வி - தமிழ்நாடு - அமைச்சுப்பணி - கருணை அடிப்படை நியமனம் - திருவாரூர் மாவட்டம் - கோட்டூர் உதவித் தொடக்க அலுவலகத்தில் - உதவியாளர் திரு.எஸ்.மோகன்குமார் என்பவர் 05.05.2016 இல் இறப்பு - வாரிசு தாரரான மகன் திரு.மோ.விக்னேஷ்பாபு என்பாருக்கு - கருணை அடிப்படையில் 01.08.2023 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் - சார்பு.

பார்வை : 1. அரசாணைநிலை எண்-18 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (Q1) நாள்.23.01.2020.

2.சம்மந்தப்பட்டவரின் கருத்துரு.

3.அரசாணை நிலை எண்.151 பள்ளிக்கல்விSE(1) துறை நாள்.09.09.2022.

4.திருவாரூர் முதன்மைக்கல்விஅலுவலரின் செயல்முறைகள் கடித ந.க.எண்.4870/அ1/2018 நாள்.31.07.2023

5.திருவாரூர் முதன்மைக்கல்விஅலுவலரின் செயல்முறைகள் கடித ந.க.எண்.08803/அ1/2023 நாள். 04.01.2023.

6.அரசு கடித.efileஎண்.4419/தொ.க. (1)/2024-1. நாள்.17.05.2024.

7.தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் சென்னை-06, ந.க.எண்.026062/ஜே/((N)/E2) 2023 நாள்.22.05.2024.

8.சென்னை 06, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள்கடித ந.க.எண்.00901/ஜே/ E2/2024 நாள்.07.07.2024.

.....................

திருவாரூர் மாவட்டம், கோட்டூர் உதவித் தொடக்க அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்த திரு.எஸ்.மோகன்குமார் என்பார் பணியில் இருக்கும் 05.05.2016 அன்று காலமானார். அவரது மகன் திரு.மோ.விக்னேஷ்பாபு என்பார் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்க கோரி 09.03.2017 அன்று விண்ணப்பித்துள்ளார். திரு.மோ.விக்னேஷ்பாபு என்பவர் 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வினை மார்ச் 2010 இல் தேர்ச்சி பெற்றுள்ளார். இவரின் பிறந்த தேதி 25.05.1995 மேலே (1) இல் படிக்கப்பட்ட அரசாணைப்படி தனியர் கருணை அடிப்படையிலான அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ளார்.

இறந்த அரசு ஊழியரின் குடும்பத்தில் வறிய நிலையும், அவருடைய குடும்பத்தில் எவரும் அரசு பணியில் இல்லை என்பதை கருத்தில் கொண்டு, திரு.மோ.விக்னேஷ்பாபு என்பவருக்கு திருவாரூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.4870/அ1/2018 நாள்.31.07.2023 இல் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டு அவர் 01.08.2023 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளதாக மேல் தெரிவிக்கப்பட்ட நிலையில் திரு.மோ.விக்னேஷ்பாபு என்பவரின் பணியினை தனியர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணியில் இணைந்த 01.08.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு பள்ளிக்கல்வி இயக்குநரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் கடித ந.க.எண்.00901/ஜே/இ2/2024 நாள்.07.07.2024 இல் அனைத்து அசல் சான்றிதழ் மற்றும் கருத்துருவினை இணைத்து அரசுக் கடித fileஎண்.4419/தொ.க.(1)/2024-1 நாள்.17.05.2024 இல் தெரிவிக்கப்பட்டவாறு நியமன அலுவலரான முதன்மைக்கல்வி அலுவலர் நிலையில் விதி தளர்வாணைகள் தேவைப்படாத நிலையில் பணிவரன்முறை செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் மற்றும் அரசுக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு திரு.மோ.விக்னேஷ்பாபு இளநிலை உதவியாளர், ஜானகி அண்ணி அரசு மேல்நிலைப்பள்ளி ஆலத்தம்பாடி என்பாரது கருத்துரு ஆய்வு செய்து அதனை ஏற்று தமிழ்நாடு அமைச்சுப்பணியில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.மோ.விக்னேஷ்பாபு என்பவரின் பணியினை பணி நியமனத்திற்கு தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனை அடிப்படையில் கீழ்க்கண்டவாறு பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண் | பெயர்/பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் | கல்வித் தகுதி | பிறந்ததேதி மற்றும் பணிநியமன நாளில் வயது | இளநிலை உதவியாளர் பதவியில் | |
|---|---|---|---|---|---|
| | | | | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
| 1 | திரு.மோ.விக்னேஷ்பாபு இளநிலை உதவியாளர் ஜானகி அண்ணி அரசு மேல்நிலைப் பள்ளி, ஆலத்தம்பாடி | 10 ஆம் வகுப்பு தேர்ச்சி | 25.05.1995 29 வயது | 01.08.2023 முற்பகல் | 01.08.2023 முற்பகல் |

அவ்வாறு பணிவரன்முறை செய்யப்படுவதால் ஆண்டு ஊதிய உயர்வுகள் விதிகளின் படி பெற தகுதியுடையவராகிறார். இத்துடன் பெறப்பட்ட தனியரது பணிப்பதிவேடு மற்றும் அசல் கல்விச்சான்றிதழ்கள் பரிசீலனைக்கப்பின் திரும்ப அனுப்பி வைக்கப்படுகிறது.

இவ்வாணை பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதலையும், பணிவரன்முறை சார்ந்தப் பதிவுகளை தொடர்புடையவரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளவும் சார்ந்த அலுவலருக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு: பணிபதிவேடு, அசல் கல்விச் சான்றுகள்

முதன்மைக்கல்வி அலுவலர் (பொ)
திருவாரூர்.

பெறுநர்-

1. தலைமை ஆசிரியர், ஜானகி அண்ணி அரசு மேல்நிலைப்பள்ளி, ஆலத்தம்பாடி ,
   (தொடர்புடையவர் கூடுதல் படியுடன்).

நகல்

1. பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (பணியாளர்தொகுதி) சென்னை-06, பணிந்தனுப்பப்படுகிறது.
2. மாவட்டக்கல்வி அலுவலர் (இடைநிலை), திருவாரூர், தகவலுக்காக அனுப்பப்படுகிறது